TEACHERS adda247

adda247

**Lang. Code : 17**

इस पुस्तिका में **20** पृष्ठ हैं ।

This booklet contains **20** pages.

# TAJ 19-I

**प्रश्न-पत्र I / PAPER I**

**तमिल भाषा परिशिष्ट**

**Tamil Language Supplement**

**भाग IV & V / PART IV & V**

परीक्षा पुस्तिका संकेत

**Test Booklet Code**

# P

परीक्षा पुस्तिका संख्या

**Test Booklet No.**

**इस परीक्षा पुस्तिका को तब तक न खोलें जब तक कहा न जाए ।**

**Do not open this Test Booklet until you are asked to do so.**

**इस परीक्षा पुस्तिका के पिछले आवरण (पृष्ठ 19 व 20)पर दिए निर्देशों को ध्यान से पढ़ें ।**

**Read carefully the Instructions on the Back Cover (Page 19 & 20) of this Test Booklet.**

**तमिल में निर्देशों के लिए इस पुस्तिका का पृष्ठ 2 देखें । / For instructions in Tamil see Page 2 of this Booklet.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. यह पुस्तिका मुख्य परीक्षा पुस्तिका की एक परिशिष्ट है, उन परीक्षार्थियों के लिए जो या तो भाग IV (भाषा I) **या** भाग V (भाषा II) **तमिल** भाषा में देना चाहते हैं, लेकिन **दोनों नहीं** ।
2. परीक्षार्थी भाग I, II, III के उत्तर मुख्य परीक्षा पुस्तिका से दें और भाग IV व V के उत्तर उनके द्वारा चुनी भाषाओं से ।
3. अंग्रेज़ी व हिन्दी भाषा पर प्रश्न मुख्य परीक्षा पुस्तिका में भाग IV व भाग V के अन्तर्गत दिए गए हैं । भाषा परिशिष्टों को आप अलग से माँग सकते हैं ।
4. इस पृष्ठ पर विवरण अंकित करने एवं उत्तर पत्र पर निशान लगाने के लिए **केवल काले/नीले बॉल पॉइंट पेन** का प्रयोग करें ।
5. इस भाषा पुस्तिका का **संकेत** है **P** । यह सुनिश्चित कर लें कि इस भाषा परिशिष्ट पुस्तिका का संकेत, उत्तर पत्र के **पृष्ठ-2** एवं मुख्य परीक्षा पुस्तिका पर छपे संकेत से मिलता है । अगर यह भिन्न हो, तो परीक्षार्थी दूसरी भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका लेने के लिए निरीक्षक को तुरन्त अवगत कराएँ ।
6. इस परीक्षा पुस्तिका में **दो** भाग IV और V हैं, जिनमें **60** वस्तुनिष्ठ प्रश्न हैं, जो प्रत्येक 1 अंक का है :
   भाग-IV : भाषा I - (तमिल) (प्र. 91 से प्र. 120)
   भाग-V : भाषा II - (तमिल) (प्र. 121 से प्र. 150)
7. भाग-IV में भाषा-I के लिए 30 प्रश्न और भाग-V में भाषा-II के लिए 30 प्रश्न दिए गए हैं । इस परीक्षा पुस्तिका में केवल तमिल भाषा से संबंधित प्रश्न दिए गए हैं । **यदि भाषा-I और/या भाषा-II में आपके द्वारा चुनी गई भाषा(एँ) तमिल के अलावा है तो कृपया उस भाषा वाली परीक्षा पुस्तिका माँग लीजिए । जिन भाषाओं के प्रश्नों के उत्तर आप दे रहे हैं वह आवेदन पत्र में चुनी गई भाषाओं से अवश्य मेल खानी चाहिए ।**
8. **परीक्षार्थी भाग-V (भाषा-II) के लिए, भाषा सूची से ऐसी भाषा चुनें जो उनके द्वारा भाषा I (भाग-IV) में चुनी गई भाषा से भिन्न हो ।**
9. रफ कार्य परीक्षा पुस्तिका में इस प्रयोजन के लिए दी गई खाली जगह पर ही करें ।
10. सभी उत्तर केवल OMR उत्तर पत्र पर ही अंकित करें । अपने उत्तर ध्यानपूर्वक अंकित करें । उत्तर बदलने हेतु श्वेत रंजक का प्रयोग निषिद्ध है ।

## *INSTRUCTIONS FOR CANDIDATES*

1. This booklet is a supplement to the Main Test Booklet for those candidates who wish to answer **EITHER** Part IV (Language I) **OR** Part V (Language II) in **TAMIL** language, but **NOT BOTH**.
2. Candidates are required to answer Parts I, II, III from the Main Test Booklet and Parts IV and V from the languages chosen by them.
3. Questions on English and Hindi languages for Part IV and Part V have been given in the Main Test Booklet. Language Supplements can be asked for separately.
4. Use **Black/Blue Ball Point Pen only** for writing particulars on this page / marking responses in the Answer Sheet.
5. The CODE for this Language Booklet is **P**. Make sure that the CODE printed on **Side-2** of the Answer Sheet and on your Main Test Booklet is the same as that on this Language Supplement Test Booklet. In case of discrepancy, the candidate should immediately report the matter to the Invigilator for replacement of the Language Supplement Test Booklet.
6. This Test Booklet has **two** Parts, IV and V, consisting of **60** Objective Type Questions, each carrying 1 mark :
   Part-IV : Language I - (Tamil) (Q. 91 to Q. 120)
   Part-V : Language II - (Tamil) (Q. 121 to Q. 150)
7. Part-IV contains 30 questions for Language-I and Part-V contains 30 questions for Language-II. In this Test Booklet, only questions pertaining to Tamil language have been given. **In case the language/s you have opted for as Language-I and/or Language-II is a Language other than Tamil, please ask for a Test Booklet that contains questions on that language. The language being answered must tally with the languages opted for in your Application Form.**
8. **Candidates are required to attempt questions in Part -V (Language-II) in a language other than the one chosen as Language-I (in Part-IV) from the list of languages.**
9. Rough work should be done only in the space provided in the Test Booklet for the same.
10. The answers are to be recorded on the OMR Answer Sheet only. Mark your responses carefully. No whitener is allowed for changing answers.

परीक्षार्थी का नाम (बड़े अक्षरों में) : ______

Name of the Candidate (in Capitals) :

अनुक्रमांक : (अंकों में) ______

Roll Number : in figures

: (शब्दों में) ______

: in words

परीक्षा केन्द्र (बड़े अक्षरों में) : ______

Centre of Examination (in Capitals) :

परीक्षार्थी के हस्ताक्षर : ______ निरीक्षक के हस्ताक्षर : ______

Candidate's Signature : Invigilator's Signature :

Facsimile signature stamp of

Centre Superintendent ______

**P**

**Lang. Code : 17**

இந்த நூற்கட்டு **20** பக்கங்கள் கொண்டது

# TAJ 19-I

## தாள் I

## தமிழ் மொழி துணை நூற்கட்டு
## பகுதி IV & V

தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு

**P**

**அவிழ்க்கச் சொல்லப்படும் வரை யாரும் இந்த நூற்கட்டை அவிழ்க்கக் கூடாது. இந்த நூற்கட்டின் பின்பக்க உறைப்பகுதியில் (பக்கம் 19 & 20) காணப்படும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்.**

### தேர்வு எழுதுவோர்க்கான வழிகாட்டும் குறிப்புகள்

1. இந்நூற்கட்டு முக்கிய தேர்வு நூற்கட்டுக்கான இணைப்பாகும். இது பகுதி IV (மொழி I) **அல்லது** பகுதி V க்கு (மொழி II) **தமிழ்** மொழியில் விடையளிக்க விரும்புவோர்க்கு மட்டுமே உரியது. **இரண்டிற்கும் உரியது அல்ல.**
2. தேர்வு எழுதுவோர் முக்கிய தேர்வு நூற்கட்டின் பகுதி **I, II, III** க்கும் அவர்கள் தேர்ந்தெடுத்த மொழிகளின் பகுதி **IV, V** ஆகியவற்றிற்கும் விடை அளிக்கவும்.
3. ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளின் பகுதி **IV** மற்றும் பகுதி **V** ற்கான வினாக்கள் முக்கிய தேர்வு நூற்கட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மொழி இணைப்பைத் தனியாக வாங்கிக் கொள்ள வேண்டும்.
4. இப் பக்கத்தில் வினவப்படும் உரிய விவரங்களை/விடைத்தாளில் நீர் மேற்கொள்ளும் பதில் வினையை **நீலம் மை பந்துருள்முனைப் பேனாவினால் மட்டும் நிரப்புக.**
5. இந் நூற்கட்டின் சங்கேதக் குறியீடு **P** ஆகும். இந் நூற்கட்டின் மீதும் இதன் **பக்கம் 2-லும்** அச்சாகி உள்ள சங்கேதக் குறியீடுகள் இரண்டும் ஒன்றே தானா என்பதைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்க. மேலும் உம் தேர்வு நூற்கட்டு எண்ணும் விடைத்தாள் எண்ணும் ஒன்றேதானா என்பதையும் சரிபார்த்து உறுதி செய்துகொள்க. இவை ஒன்றோடு ஒன்று முரணாக இருக்குமேயானால் தேர்வு எழுதுபவர் இது பற்றி உடனே தேர்வு மேற்பார்வையாளர் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். வேறொரு தேர்வு நூற்கட்டு மற்றும் வேறொரு விடைத்தாள் ஆகிய இரண்டையும் அவற்றிற்குப் பதிலாகக் கேட்டுப் பெற வேண்டும்.
6. இது தேர்வு நூற்கட்டு **2** பகுதிகள் கொண்டது. ஒரே ஒரு மதிப்பெண் நேரிய **60** பல் விடை வினாக்கள் கொண்ட இப்பகுதிகள் முறையே **IV & V** என்றவாறாக அமையும்.
   பகுதி **IV** : மொழி - **I** (தமிழ்) (வினாக்கள் 91 முதல் 120 வரை)
   பகுதி **V** : மொழி - **II** (தமிழ்) (வினாக்கள் 121 முதல் 150 வரை)
7. பகுதி **IV** இல் மொழி **I** க்கும், பகுதி **V** இல் மொழி **II** க்கும் தலா **30** வினாக்கள். இத் தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிகளுக்குரிய வினாக்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன.இத்தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிக்கான வினாக்கள் மட்டுமே உள்ளன. **தமிழ் மொழி நீங்கப் பிறமொழி எதனையேனும் மொழி I & II க்கு நீர் தெரிவு செய்திருப்பின் அம்மொழிக்குரிய வினாக்கள் கொண்ட தேர்வு நூற்கட்டைக் கேட்டுப் பெறவும். நீர் தேர்வு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி தேர்ந்தெடுப்பும், தேர்வு நூற்கட்டில் எழுதியுள்ள விடை மொழியும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.**
8. **தேர்வு எழுதுவோர், மொழிகள் பட்டியலிலிருந்து தேர்ந்து கொண்ட மொழி I (பகுதி IV இல்) நீங்கலாகப் பிற வேறொரு மொழியை மொழி II (பகுதி V க்கு) தேர்ந்து கொண்டு விடையளிக்க வேண்டும்.**
9. இத் தேர்வு நூற்கட்டில் ஒதுக்கப்பட்டுள்ள முன்வரைவுப் பகுதியில் மட்டும் திருந்தாப் பதிவுகள் இடம் பெற வேண்டும்.
10. ஓ.எம்.ஆர் (OMR) விடைத்தாளில் மட்டுமே விடைகள் பதிவு செய்யப்பட வேண்டும். பதில் வினைகளைக் கவனமாகப் பதிவு செய்க. விடையைத் திருத்தம் செய்து மாற்றி எழுத வெண்ணிற மை ஏதும் பயன்படுத்தக் கூடாது.

தேர்வு எழுதுபவர் பெயர்(தலைப்பு எழுத்துகளில்) ______________________

தேர்வு வரிசை எண் : எண்ணில் ______________________

: எழுத்தில் ______________________

தேர்வு மையம் (தலைப்பு எழுத்துகளில்) ______________________

தேர்வு எழுதுபவர் கையொப்பம் ______________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் ______________________

Facsimile signature stamp of Centre Superintendent ______________________

TEACHERS adda247

தேர்வு எழுதுவோர் **தமிழைத்** தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே **பகுதி - IV** [*கே.எண்: 91 - 120*] க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part - IV [Q.No. 91-120]**, if they have opted **TAMIL** as **LANGUAGE - I** only.

TEACHERS adda247

## PART – IV
## LANGUAGE – I
## தமிழ்

பகுதி தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE – I) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே – IV (கே.எண்: 91-120) க்கான விடைகளைத் தரவேண்டும்.

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 91-99)

காப்பியம் என்பது ஓர் இலக்கிய வகை. வாய்மொழி இலக்கியம், தன்னுணர்ச்சிப் பாடல்கள், கதைபொதி பாடல்கள் என்று விரிந்து கொண்டே வந்த இலக்கிய வளர்ச்சிக் காப்பியத்தில் முழுமை எய்தியது எனலாம். காவியம் என்னும் வட சொல்லின் தமிழ் வடிவமே காப்பியம் எனக் கொள்வதுண்டு. காவியம் என்பது கவிதையினால் செய்யப்பட்டது எனப் பொருள் தரும். காப்பியத்தைத் தொடர்நிலைச் செய்யுள் எனவும் குறிப்பர். காவியம், காப்பியம் என்னும் இவ்விரு சொற்களும் சில தமிழ்க்காப்பியப் பெயர்களில் அமைந்திருப்பதைக் காணலாம். எம்மொழியிலும், தொடக்கத்தில் காப்பிய இலக்கியம் தோன்றுவதற்கான அடிப்படை களும், வளர்ச்சிப் படிநிலைகளும் அமைந்திருக்கும். திடீரென ஒரு பேரிலக்கியப் படைப்பு ஒரு மொழியில் முகிழ்த்து எழுதல் என்பது இயலாத ஒன்று. முதலில் தனிப் பாடல்களாகவும், செய்யுள் தொகுப்புகளாகவும் இருந்த தொல் பழங்கால இலக்கியப் படைப்பு மெல்ல மெல்ல வளர்ச்சி பெற்றது; கதையைத் தொகுத்துக் கூறும் பாடல்கள் பிறந்தன. கற்பனை வளம் விரிவடைந்தது. இவ்வாறு காப்பியப் படைப்புகள் உருவாயின.

காப்பியத்தைத் தொடங்கும் போது வாழ்த்து, வணக்கம், வருபொருள் கூறுவதும் மரபாக உறுதிப்பட்டது. காப்பியத்தின் முதல் சொல் பெருமைக்குரிய சொல்லாக அமைய வேண்டும் என்பது மரபு ஆனது. காப்பியத்தினுள் தலையாய அறக் கருத்துக்களை உட்பொதிவாக வைப்பது அல்லது வெளிப்படையாகச் சொல்வது மரபு ஆயிற்று. இயற்கையிறந்த நிகழ்வுகளும், எதிர்வரும் நிகழ்வுகளை உணர்த்துவதான கனவு, நிமித்தம், வான்மொழி ஆகியவையும் காப்பியங்களில் இடம் பெறுவது மரபாயிற்று. காப்பியங்களில் கதை நிகழ்ச்சி, இடையில் தொடங்கப் பெறுவதும், பல கலைகள் குறிக்கப்படுவதும், இசைப்பாடல். கட்டுரை ஆகியவை இடம் பெறுதலும் மரபாகக் காணப்படுகின்றன.

பெருங்காப்பியம் என்பது வாழ்த்துதல், தெய்வத்தை வணங்குதல், வருபொருள் உரைத்தல் என்ற மூன்றில் ஒன்றினைத் தொடக்கத்தில் பெற்று வரும். அவற்றுள் இரண்டோ மூன்றுமோ பெற்றும் காப்பியம் தொடங்கலாம். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருளைப் பயனாகத் தருவதாக அமையும். தன்னிகர் இல்லாத தன்மை உடையவனைக் காப்பியத் தலைவனாகக் கொண்டிருத்தல் வேண்டும். மலை, கடல், நாடு, நகர், ஆறு பருவங்கள், கதிரவன் தோற்றம், சந்திரனின் தோற்றம் ஆகியவற்றைப் பற்றிய வருணனைகளைக் கொண்டிருக்க வேண்டும். திருமணம் புரிதல், முடி சூடல், சோலையில் இன்புறுதல், நீர் விளையாடல், மதுவுண்டு களித்தல், மக்களைப் பெற்றெடுத்தல், ஊடல் கொள்ளுதல், புணர்ச்சியில் மகிழ்தல்

முதலிய நிகழ்வுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

பெருங்காப்பியத்தில் அமைச்சர்களுடன் ஆலோசனை செய்தல், தூது செல்லல், போர் மேற்கோண்டு செல்லுதல்,போர் நிகழ்ச்சி, வெற்றி பெறுதல், போன்ற நிகழ்வுகளும், இடம் பெறுதல் வேண்டும். சந்தி எனப்படும் கதைத் தொடக்கம், வளர்ச்சி, விளைவு, முடிவு என்பவை வரிசைப்படி அமைந்திருக்க வேண்டும். அமைப்பு முறையில் பெருங்காப்பியம் உள் பிரிவுகளுக்குச் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்ற பெயர்களில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். எண்வகைச் சுவையும், மெய்ப்பாட்டுக் குறிப்புகளும் கேட்போர் விரும்பும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். கற்றறிந்த புலவரால் புனையப்பட்டதாக இருத்தல் வேண்டும். நாற்பொருளும் குறையாது வர வேண்டும். இவை தவிரப் பிற உறுப்புகளில் சில குறைந்தும் வரலாம். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கனுள் ஒன்றேனும், இரண்டேனும், மூன்றேனும் குறைந்து வருவது சிறுகாப்பியம் எனப்படும் காப்பியமாகும்.

91. எதிர்வர இருக்கும் நிகழ்வுகளை உணர்த்த காப்பிய மரபு இவற்றைப் பயன்படுத்தியது :
(1) கனவு, நிமித்தம், வான் மொழி
(2) இயற்கையிறந்த நிகழ்வுகள், கதை நிகழ்ச்சி, கட்டுரை
(3) இசைப் பாடல், கட்டுரை, வான் மொழி
(4) கனவு, கதை நிகழச்சி, கட்டுரை

92. வெளிப்படை என்பதற்கு மறுதலையாக அமைந்துள்ள சொல் :
(1) வருபொருள்
(2) அறக் கருத்து
(3) இடை நிகழ்வு
(4) உட் பொதிவு

93. பெருங்காப்பியத்தின் தொடக்கத்தில் இடம் பெறக் கூடியவை ஒன்று, இரண்டு அல்லது மூன்றும் அமையலாம் எனக் கூடியவை :
(1) அறம், பொருள், இன்பம்
(2) வாழ்த்து, இறைவணக்கம், வருபொருள் உரைத்தல்
(3) வாழ்த்துதல், நற் பொருள், வருணனை
(4) வாழ்த்து, வருணனை, நாற்பொருள்

94. காப்பியங்கள் எவை பற்றிய வருணனைகளைக் கொண்டிருத்தல் மரபு :
(1) அறம், பொருள், இன்பம், வீடு, காப்பியத் தலைமை
(2) திருமணம், முடிசூடல், சோலையில் இன்புறுதல், கதிரவன் தோற்றம்
(3) மலை, கடல், நாடு, நகர், ஆறு பருவங்கள், கதிரவன் தோற்றம், சந்திரன் தோற்றம்
(4) காப்பியத் தலைவன், திருமணம் புரிதல், முடி சூடல், நீர் விளையாடல், புணர்ச்சியில் மகிழ்தல்

95. காப்பியங்கள் கொண்டிருக்க வேண்டிய நிகழ்வுகளில் இன்புறுதல், களித்தல், மகிழ்தல் குறித்தவை இவை :
(1) ஊடல், நீர், மது
(2) சோலை, மது, புணர்ச்சி
(3) திருமணம், மக்கள், முடிசூடல்
(4) விளையாட்டு, பெற்றெடுத்தல், திருமணம்

**96.** பெருங்காப்பியத்தில் இடம் பெறும் இவற்றுடன் வீரம் உள்ளடங்கியுள்ளதாகக் கூறலாம் :

(1) ஆலோசனை செய்தல், தூது செல்லல்

(2) வெற்றி பெறுதல், அமைச்சர் ஆலோசனை

(3) போர் மேற்கொள்ளுதல், போர் நிகழ்த்தல், வெற்றி பெறுதல்

(4) தூது செல்லல், போர்க்களம் அமைத்தல்

**97.** சந்தி எனப்படுவது இவ்வரிசைப்படி அமைந்திருப்பது :

(1) சருக்கம், இலம்பகம், பரிச்சேதம்,

(2) கதைத் தொடக்கம், வளர்ச்சி, விளைவு, முடிவு

(3) மெய்ப்பாடு, எண்வகைச் சுவை, நாற்பொருள்

(4) முடி சூடல், போர் மேற் செல்லுதல், வெற்றி பெறுதல்

**98.** காப்பியத்திற்கு முன்பான இலக்கிய வடிவங்கள் முறையே :

(1) காவியம், தொடர்நிலைச் செய்யுள், கதைப் பாடல்

(2) வாய்மொழி இலக்கியம், தன்னுணர்ச்சிப் பாடல்கள், தொடர்நிலைச் செய்யுள்

(3) வாய்மொழி இலக்கியம், தன்னுணர்ச்சிப் பாடல்கள், கதைபொதி பாடல்கள்

(4) வாய்மொழிப் பாடல், தொடர்நிலைச் செய்யுள், தன்னுணர்ச்சிப் பாடல்கள்,

**99.** தொல் பழங்கால இலக்கியப் படைப்பின் அங்கங்களாக இருந்தவை :

(1) பேரிலக்கியம், தனிப் பாடல்கள்

(2) தனிப் பாடல்கள், செய்யுள் தொகுப்புகள்

(3) தனிப் பாடல்கள், கதைப் பாடல்கள்

(4) செய்யுள் தொகுப்புகள், பேரிலக்கியம்

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 100-105)

புனல்சூழ்ந்து வடிந்து போன
நிலத்திலே "புதிய நாளை"
மனிதப் பைங்கூழ்முளைத்தே
வகுத்தது! மனித வாழ்வை
இனிய நற்றமிழே நீதான்
எழுப்பினை! தமிழன் கண்ட
கனவுதான், இந்நாள் வையக்
கவின் வாழ்வாய் மலர்ந்ததன்றோ?

பழந்தமிழ் மக்கள் அந்நாள்
பறவைகள், விலங்கு, வண்டு
தழைமூங்கில் இசைத்ததைத், தாம்
தழுவியே இசைத்ததாலே
எழும் இசைத் தமிழே! இன்பம்
எய்தியேகுதித்த தாலே
விழியுண்ணப் பிறந்த கூத்துத்
தமிழே! என் வியப்பின் வைப்பே!

இசையினைக் காணு கின்றேன்;
எண் நுட்பம் காணு கின்றேன்
அசைக்கொணாக் கல்தச்சர்கள்
ஆக்கிய பொருள்காண் கின்றேன்;
பசைப்பொருட் பாடல் ஆடல்
பார்க்கின்றேன்; ஓவியங்கள்
நகையுள்ள மருந்து வன்மை
பலபல நான்காண்கின்றேன்.

வளர்பிறை போல் வளர்ந்த
தமிழரில் அறிஞர் தங்கள்,
உளத்தையும், உலகின் ஆர்ந்த
வளத்தையும் எழுத்துச் சொல்லால்,
விளக்கிடும் இயல்முதிர்ந்தும்,
வீறுகொள் இசை யடைந்தும்,
அளப்பிலா உவகை ஆடல்
தமிழேநீ என்றன் ஆவி!

**100.** தமிழன் கண்ட கனவின் விளைவு யாது?

(1) உலகத்தின் அழகிய வாழ்வு மலர்ச்சி

(2) நற்றமிழ் எழுச்சி

(3) அழகின் புது வாழ்வு

(4) இசைத் தமிழ் இன்பம்

TEACHERS adda247

**101.** இசைத் தமிழ் எழுந்த வகையினை இவ்வாறு கூறலாம்; பழந்தமிழ் மக்கள் இவற்றைத் தழுவி இசைத்ததும் இதில் அடங்கும் :

(1) பறவை, விலங்கு, வண்டு இவற்றின் வண்ணம்

(2) தழை, மூங்கில், வண்டு இவற்றின் ஒலிகள்

(3) பறவைகள், விலங்கு, வண்டு, மூங்கில் இவற்றின் இசைத்தல்

(4) இன்பம் எய்திய கூத்தின் பாங்கு

**102.** தமிழ்ச் சமூகத்தில் காணும் கலைகள் என பாடல் குறிப்பிடுவன ; இவை நுண் கலைகள் மட்டும் :

(1) எண் நுட்பம், மருந்து வளம், கல் தச்சு

(2) இசை, எண் நுட்பம், மருந்து வளம்

(3) ஆடல், பாடல், எண் நுட்பம்

(4) இசை, சிற்பம், பாடல், ஆடல், ஓவியம்

**103.** பாடல் குறிப்பிடும் இரு அறிவியல் துறைகள் :

(1) சிற்பம், ஓவியம்

(2) கணிதம், மருத்துவம்

(3) இசை, ஆடல்

(4) இசை, சிற்பம், ஓவியம்

**104.** எழுத்து மற்றும் சொல்லால் தமிழறிஞர் விளக்குவது எது ?

(1) இசை, உவகை, இயல்

(2) உவகை, உள்ளம், உலகம்

(3) ஆடல், உவகை, இயல்

(4) உளத்தின் கருத்து, உலகின் வளம்

**105.** புதிய நாள்_________________ நிலத்தில் ___________ உயிர்கள் முளைத்ததால் உருவானது :

(1) பைங்கூழ், புனல்

(2) நீர் சூழ்ந்து வடிந்த, மனித

(3) புதிய, பசிய

(4) கனவு, கவின்

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 106-120)

**106.** ஒன்றாம் வகுப்பு மொழிப் பாடத்திற்கான பாடநூல் ஒன்று எழுத்து வரிசையில் தொடங்கி, இரண்டெழுத்துச் சொற்கள், மூன்றெழுத்துச் சொற்கள் எனத் தொடர்ந்து அதன் பின் கதைகள், கவிதைகள் என்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் எந்த அணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

(1) கீழிருந்து மேல் நோக்கிய அணுகுமுறை

(2) மேலிருந்து கீழ் நோக்கிய அணுகுமுறை

(3) ஒழுங்குபடுத்தும் அணுகுமுறை

(4) பாடத்திட்ட வடிவமைப்பு அணுகுமுறை

**107.** படிப்புத் திறனில் ஏற்படும் குறைபாடு

(1) டிஸ்லெக்சியா

(2) டிஸ்கிராபியா

(3) டிஸ்கால்குலியா

(4) டிஸ்போரியா

**108.** எழுதுவதற்கான பயிற்சியைத் தொடங்கும் ஓர் ஆசிரியர் மொழி வகுப்பில் செய்ய வேண்டியது :

(1) எழுதும் பொருள் பற்றி விரைவாகக் கூடி விவாதித்து கருத்துகளை உருவாக்கும்படி மாணவர்களிடம் கேட்பது.

(2) ஒரு தலைப்பிலான பத்தியைக் கரும்பலகையில் எழுதி அதைப் பார்த்து எழுதும்படி மாணவர்களிடம் கேட்பது.

(3) பலவகையான பத்திகளை வகுப்புக்கு வரும் முன்னே மாணவர்களைப் படித்துவிட்டு வரச் சொல்வது.

(4) தெளிவான கையெழுத்தில் எழுதும்படி மாணவர்களிடம் சொல்வது.

TEACHERS adda247

109. ஒரு குழந்தை தாய்மொழியை அடிப்படையில் இதன் வழி பெற்றுக் கொள்கிறது :

(1) கவனிப்பதன் வழியாக
(2) பேசுவதன் வழியாக
(3) எழுதுவதன் வழியாக
(4) முறையான கல்விச் சூழலில்

110. படைப்பாக்கத் திறன் என்ற வகையில் அடங்கக் கூடியது எது ?

(1) வாசித்தல் – எழுதுதல்
(2) வாசித்தல் – கவனித்தல்
(3) பேசுதல் – எழுதுதல்
(4) பேசுதல் – கவனித்தல்

111. ஒரு கவிதையைக் கற்பித்த பின், மூன்றாம் வகுப்பு ஆசிரியர் ஒருவர் பயிற்சி ஒன்றை மாணவர்களுக்குத் தர திட்டமிடுகிறார். மாணவர்கள் திறனுடன் பங்கேற்கும் வகையில் அந்தப் பயிற்சி அமைய வேண்டும் எனில் பின் வருவனவற்றில் எதனை அந்த ஆசிரியர் தேர்ந்தெடுக்க வேண்டும் ?

(1) கவிதையின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்குப் பதில் எழுதும்படி மாணவர்களிடம் சொல்வது.
(2) மாணவர்களை குழுவாக இணைந்து ஒரு கவிதைக்குப் பொருளுரைக்கச் சொல்வது.
(3) கவிதையை வரிக்கு வரி மனப்பாடம் செய்யும்படி மாணவர்களிடம் சொல்வது.
(4) கவிதையில் இடம் பெறும் புதிய சொற்களைக் கொண்டு புதிய வாக்கியங்களை அமைக்கும்படி மாணவர்களிடம் சொல்வது.

112. மொழியறிவு பெறுதல் குறித்து பின்வருவனவற்றில் எந்தக் கருத்து சரியானது ?

(1) மொழி கற்பதற்கான உள்ளார்ந்த திறன் குழந்தைகளிடம் இல்லை.
(2) பள்ளிக்கு வரும்போது குழந்தைகள் மொழியைக் கற்கிறார்கள்.
(3) மொழி கற்பதற்கான உள்ளார்ந்த திறனை ஒவ்வொரு குழந்தையும் பெற்றுள்ளது .
(4) பல்வேறு மூலகங்களின் வழியாகக் குழந்தைகள் மொழியைக் கற்கிறார்கள்.

113. மொழி கற்பதில் மிகமிக முக்கியமான ஒன்று :

(1) டி எல் எம் பயன்பாடு (கற்பித்தல் கற்றல் துணைப் பொருட்கள்)
(2) சமூகத் தொடர்பு உறவு
(3) நூல்களைப் படித்தல்
(4) திரைப்படம் அல்லது நாடகங்களைப் பார்ப்பது.

114. ஒரு அத்தியாயத்தில் இடம்பெறும் ஓவியம் அல்லது விளக்கப்படம் இவ்வாறு பயன்படுகிறது :

(1) பாடப் புத்தகத்திலும் அத்தியாயத்திலும் விளக்கப் படங்களைத் தருவது ஒரு வழக்கம்.
(2) பாடப் புத்தகத்தை அது மனம் கவரும் ஒன்றாக ஆக்குகிறது.
(3) அருமையான கருத்துக்களைப் புரிந்துகொள்ள அது உதவுகிறது.
(4) ஒரு அத்தியாயத்தை எழுதுவது கடினமானது, ஆனால் விளக்கப் படம் வரைவது எளிதானது.

TEACHERS adda247

115. ஒரு ஆசிரியர் மாணவர்களை நல்ல எழுத்துத் திறன் கொண்டவர்களாக மாற்ற வேண்டும் என விரும்பினால் எதற்கு அதிக முக்கியத்தும் தர வேண்டும்:

(1) கையெழுத்து

(2) இலக்கணம்

(3) வெளிப்படும் முறை

(4) சொல் அளவு

116. டிஸ்லெக்ஸியா இதனுடன் தொடர்புடையது

(1) மனவளக் குறைபாடு

(2) நடத்தை முறைக் குறைபாடு

(3) கணிதத் திறன் குறைபாடு

(4) வாசித்தல் திறன் குறைபாடு

117. ஒரு பாடப்பகுதியைப் படிக்கும் போது பின் வருவனவற்றில் எது மிகமிக முக்கியமானது ?

(1) சரியான உச்சரிப்புடன் படிப்பது

(2) நிறுத்தற் குறிகளை முழுமையாகவும் சரியாகவும் பயன்படுத்துவது.

(3) பாடப் பகுதியின் பொருளைப் புரிந்து கொள்வது.

(4) விரைவாகப் படிப்பது.

118. இரண்டாம் வகுப்பு ஆசிரியர் ஒருவர் மாணவர்களின் சொல்வளன் வளர்ச்சிக்கு மிக அதிக முக்கியத்துவம் தருகிறார். சொல்லறிவு வளர்ச்சியைப் பெருக்க பின் வருவனவற்றில் எது சிறந்த வழிமுறை ?

(1) புதிய பாடம் ஒன்றைப் படிக்கத் தொடங்கும் முன் அனைத்துப் புதிய வார்த்தைகளையும் மாணவர்கள் மனப்பாடம் செய்வது.

(2) புதிய சொற்களின் அர்த்தத்தை அவற்றின் பின்புலத்தில் மாண வர்கள் அனுமானித்து அறிவது.

(3) ஒவ்வொரு புதிய அல்லது கடினமான சொல்லுக்கும் அகராதியின் உதவியை மாணவர்கள் நாடுவது.

(4) அத்தியாயத்தில் உள்ள அனைத்துப் புதிய அல்லது கடினமான சொற்களையும் அடிக்கோடிட்டு பிறகு அவற்றின் பொருளை மனனம் செய்வது.

119. இரண்டாம் வகுப்பு ஆசிரியர் ஒருவர் தனது வகுப்பில் ஆர்வமூட்டும் கதை ஒன்றைச் சைகைகளுடனும், உணர்ச்சி வெளிப்பாடுகளுடனும் சொல்லிக் கொண்டிருக்கிறார், சொல்லி முடித்த பின் சில மாணவர்களிடம் அக் கதையைத் தமது சொந்த நடையில் வகுப்பறையில் எடுத்துரைக்கக் கேட்கிறார், இதன் வழியாக அவர் மாணவர்களின் இத்திறனை மதிப்பிட்டு அறிய முயல்கிறார் :

(1) கவனித்துப் புரிந்துகொள்ளும் திறன்

(2) பேச்சுத் திறன்

(3) படித்துப் புரியும் திறன்

(4) எழுதும் திறன்

120. வகுப்பறை அச்சு வடிவம் நிறைந்த சூழலைக் கொண்டுள்ளது என்பதன் பொருள் :

(1) வகுப்பறையின் சுவர்கள் வண்ணமயமாக இருப்பது

(2) கற்பிக்கப்படும் பாடப் பொருளுடன் தொடர்புடைய கருத்துகளை எழுதி சுவரில் ஒட்டி வைத்தல்

(3) பெரிய எழுத்து வடிவில் அகர வரிசையை எழுதி ஒட்டி வைத்தல்

(4) இனிய கவிதைகளை அவற்றுக்கான விளக்கப் படங்களுடன் சுவரில் வரைந்து வைத்தல்

TEACHERS adda247

தேர்வு எழுதுவோர் **தமிழைத்** தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே **பகுதி - V** [**கே.எண்:** *121 - 150*] க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part - V [Q.No. 121-150]**, if they have opted **TAMIL** as **LANGUAGE - II** only.

adda247 TEACHERS

## PART – V
## LANGUAGE – II
## தமிழ்

**பகுதி தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE – II) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே – V (கே.எண்: 121-150) க்கான விடைகளைத் தரவேண்டும்.**

**(Q. Nos. 121-128) :**

சங்க இலக்கியங்களை அகம், புறம் என்று பிரிப்பர். காதலை பற்றிப் பாடும் பாடல்களை அகம் என்றும், காதல் தவிர, பிற செய்திகளைப் பாடும் பாடல்களைப் புறம் என்றும் கூறுவர். இதற்கான இலக்கணத்தைத் தொல்காப்பியம் கூறுகிறது. அகப்பாடல்கள் கற்பனையான தலைவன், தலைவியின் காதலைப் பற்றி விளக்கியுரைக்கின்றன. புறப் பாடல்கள் நாட்டை ஆளும் அரசனின் வீரம், கொடை, சமூகத்திற்கு அரசன் ஆற்ற வேண்டிய கடமைகள், கல்வியின் சிறப்பு போன்றவற்றைக் கூறுகின்றன. பெரும்பாலான புறப்பாடல்கள் அரசனின் புகழைப் பாடுவனவாகவே உள்ளன. பூம்புகார், உறையூர், மதுரை, வஞ்சி போன்ற நகரங்களைத் தவிர, பெரும்பாலும் சிற்றூர்களே அக்காலத்தில் இருந்தமையால் மக்கள் இயற்கையோடு இயைந்த சீரிய வாழ்க்கையை வாழ்ந்ததைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. அகப்பாடல்கள் பெரும்பாலும் கற்பனைப் பாடல்களாக இருந்தாலும், அக்கால மக்களின் காதல் வாழ்க்கையை முழுமையாகவே வெளிப் படுத்துகின்றன.

புறப் பாடல்கள் பெரும்பாலும் கற்பனையாகப் பாடப்படவில்லை. இரு அரசர்களுக்கிடையே போர் ஏற்படும்போது புலவர்கள் தலையிட்டுப் போரைத் தடுத்துள்ளனர். அரசன் மக்களிடம் அளவுக்கதிகமாக வரி வாங்கும் நேரத்தில் புலவர்கள் தலையிட்டு அரசனுக்கு அறிவுரை கூறியுள்ளனர். இந்நிகழ்வுகள் புறப்பாடல்களில் இடம் பெற்றுள்ளன. புறப்பாடல்களில் இயற்கைக்கு மீறிய செய்திகள் கூறப்படவில்லை. சங்க கால வரலாற்றைத் தொகுப்பதற்கு, சங்கப் புறப்பாடல்கள் ஓரளவுக்குத் துணை பிற்கின்றன. அரசர்கள் தமக்குள் போரிட்டுக் கொண்டாலும் புலவர்களைப் பெரிதும் மதித்துள்ளனர். யாருமே தொட அஞ்சும் முரசு கட்டிலில் ஏறிப்படுத்து உறங்கிய மோசிகீரனார் என்னும் புலவரைத் தண்டிக்காது, அவர் தூங்கி எழுகின்றவரை கவரி கொண்டு அவருக்கு விசிறினான் சேர மன்னன் தகடூர் எறிந்த பெருங்சேரல் இரும்பொறை என்று புறநானூறு கூறுகிறது.

அரசன் கோப்பெருஞ்சோழன் மேல் நட்புக் கொண்டிருந்த காரணத்தால், அவன் வடக்கிருந்து உயிர் துறக்கும் நேரத்தில் புலவர் பிசிராந்தையாரும் அவனுடன் உயிர் துறந்தார் எனவும் செய்தி உண்டு. பேகன் என்னும் அரசன் தன் மனைவி கண்ணகியை விட்டு நீங்கி இன்னொருத்தியுடன் வாழ்ந்ததை மாற்றி, கண்ணகியுடன் சேர்த்து வைத்தனர் கபிலரும் பரணரும் என்ற செய்தி கூறப்படுகிறது. இவ்வாறு அரச குடும்பங்களின் துன்ப நிகழ்வுகளிலும் புலவர்கள் பங்கு கொண்டு செயல்பட்டமை குறித்த செய்திகள் புறநானூற்றில் உண்டு. மேலும் மலையமான் திருமுடிக்காரியின் சிறு குழந்தைகளைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் யானையின் காலில் இட்டு மிதிக்கச் செய்ய முற்பட்ட போது கோவூர்கிழார் கூறியதால் அந்தக் குழந்தைகள் காப்பாற்றப்பட்டனர் என்ற செய்தியும் புறநானூற்றில் இருக்கிறது.

TEACHERS adda247

121. இவை சிற்றூர்கள் இல்லை; சோழர், பாண்டியர், சேரர் என்ற வரிசையில் அமைகின்றன :

(1) வஞ்சி, பூம்புகார், மதுரை

(2) பூம்புகார், மதுரை, வஞ்சி

(3) உறையூர்,வஞ்சி, பூம்புகார்

(4) மதுரை, வஞ்சி, உறையூர்

122. மக்கள் இயற்கையுடன் இணைந்த வாழ்க்கையை வாழ்ந்தார்கள் என சங்க இலக்கியங்கள் கூறுவதற்கான காரணம் :

(1) மக்கள் சிறறூர்களிலே வாழ்ந்தனர்

(2) பூம்புகார், உறையூர், மதுரை, வஞ்சி நகரங்களில்வாழ்ந்தனர்.

(3) அகப்பாடல்கள் கற்பனைப் பாடல்களாக இருந்தன.

(4) அகம், புறம் இரண்டும் மக்களின் வாழ்வைக் கூறுவன.

123. புலவர்கள் செய்த நற்செயல்கள் :

(1) கற்பனை பாடல்களைப் பாடியது, இயற்கையைப் பாடியது.

(2) சங்ககால வரலாற்றைத் தொகுத்தனர். வரி வழங்கும் முறையைக் கூறினர்.

(3) இயற்கையை மீறிய செய்திகளைக் கூறவில்லை.

(4) அரசர்களுக்கிடையில் போரைத் தடுத்தனர், அளவுடன் வரி வாங்க அறிவுரை அளித்தனர்.

124. சேர மன்னன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை மோசிகீரனார் என்னும் புலவருக்கு கவரி கொண்டு விசிறியது இதற்கு எடுத்துக்காட்டாகும் :

(1) அரசர்கள் தமக்குள் போரிட்டுக் கொண்டனர், முரசுக் கட்டிலைப் பாதுகாத்தனர்.

(2) அரசர்கள் புலவர்களைப் பெரிதும் மதித்துள்ளனர்.

(3) புலவர்கள் அரசர்களிடம் நட்பு கொண்டிருந்தனர்.

(4) அரசர்களின் குடும்ப நிகழ்வுகளில் புலவர்கள் பங்கு கொண்டனர்.

125. அரசர்களுக்கும் புலவர்களுக்கும் இடையில் இருந்த நட்புக்கு இவர்கள் எடுத்துக்காட்டுகளாகின்றனர்:

(1) பெருச்சேரல் இரும்பொறை, மோசிகீரனார்

(2) கபிலர், பரணர்

(3) கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார்

(4) கிள்ளிவளவன், கோவூர்கிழார்

126. கபிலரும் பரணரும் ஆற்றிய உதவி இதற்கு எடுத்துக்காட்டாக நிற்கிறது :

(1) அரசர்களின் குடும்ப துன்ப நிகழ்வுகளில் புலவர்கள் பங்கு கொண்டனர்.

(2) புலவர்கள் குழந்தைகளைக் காப்பாற்ற முன்னின்றனர்.

(3) அரசர்கள் வடக்கிருந்து உயிர் துறக்கும் பழக்கம் இருந்தது.

(4) அரச குடும்பங்களில் புலவர்கள் இடம் பெற்றிருந்தனர்.

TEACHERS adda247

127. இப்பகுதியில் இடம்பெறும் ஒரு கொலை தண்டணை முறை இது :

(1) அளவுக்கதிகமாக வரி வாங்குதல்.

(2) முரசுக் கட்டிலில் உறங்குபவருக்கு அளிக்கப்படும் தண்டணை.

(3) வடக்கிருந்து உயிர் துறக்க வைத்தல்.

(4) யானையின் காலில் இட்டு இடற வைத்தல்.

128. தொல்காப்பியம் கூறும் அகம், புறம் முறையே இவற்றை உள்ளடக்கியது :

(1) வீரம், கொடை, கல்வி

(2) நகரம், சிற்றூர்

(3) காதல் பற்றிய பாடல்கள், காதல் தவிர பிற செய்திகளைப் பற்றிய பாடல்கள்

(4) கற்பனைப் பாடல்கள், வாழ்க்கைப் பாடல்கள்

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 129-135)

சங்க இலக்கியம் சமயச் சார்பற்றது என்ற கருத்து இருந்தாலும் ' தொல் சமயம்', 'வைதீக சமயம்', 'அவைதீக சமயம்' எனத் தம்முள் மாறுபட்ட சமய நெறிகள் வழக்கிலிருந்தமைக்கான சான்றுகளைச் சங்க இலக்கியங்களில் பரக்கக் காணலாம். தமிழர்களின் தொல் சமயம் என்று மானிடவியல் அறிவுத் துறையின் துணையுடன் இசெய்திகளைப் பின்வரும் தலைப்புகளில் வகைப் படுத்தலாம். ஆவியம் உயிர்ப்பாற்றல் வழிபாடு, இயற்கைப் பொருள் வழிபாடு, குலக்குறி வழிபாடு, இறந்தோர் மற்றும் மூதாதையரை வழிபடல், பேய் குறித்த நம்பிக்கை, மந்திரம், உயிர்ப்பலி, மறு உலகம், இறப்புச் சடங்கு, இறப்புக் கடவுள், வெறியாட்டு, வேலன் என்னும் பூசாரி இவையெல்லாம் சமயத்தின் முந்தைய வடிவங்கள். இவற்றில் பல இன்றும்கூட நிறுவன சமய வழிபாட்டில் இடம் பெற்றுள்ளன.

இயற்கையும் வழி -பாட்டிற்கு உரியதானது. கருப்பு என்னும் பொருளுடைய கார் என்பதிலிருந்து திரிந்த 'கால்' என்ற சொல் அச்சத்தின் குறியீடானது. இதிலிருந்தே காலன், காலி என்ற சொற்கள் உருவாயின. காலி என்ற தமிழ்ச் சொல்லில் இருந்தே காளி என்ற வடமொழிச் சொல் உருவாகியது. இதுவே பின்னாளில் காளியம்மன் என்ற பெண் தெய்வமாகியது.

மூதாதையர் வழிபாடும், வீரர் வழிபாடும் இயற்கை வழிபாட்டை அடுத்து உருவாயின. இதன் வளர்ச்சிப் போக்கில், மனிதப் பண்பேற்றமும், மனித உருவேற்றமும், பால் சார்பும் நிகழ்ந்தன. ஓர் இடத்தில் நிலையாகத் தங்காத அணங்கு, சூர் போன்ற இயற்கையிகந்த ஆற்றல்களுக்கு மாறாக ஒரே இடத்தில் கடவுளை நிலைக்கச் செய்யும் போக்கும் உருவானது. 'அச்சம் தரும் தெய்வங்கள்', 'அன்பு காட்டும் கடவுள்கள்' என்ற கருத்தாக்கங்கள் உருவாயின. எதிர்மறைச் சடங்குகளாக உயிர்ப்பலியும், ஆக்கமுறைச் சடங்காகப் பூச்சொரிந்து வழிபடலும் உருவாயின. அச்சம் தரும் அணங்கு படிப்படியாகப் பெண் தெய்வமாக மாற்றம் பெற்றது. தொடக்கத்தில் பெண் பூசாரிகளும் பின்னர் ஆண் பூசாரிகளும் உருவாயினர். தெய்வத்தை வரவழைக்கும் சடங்குகளும் பின்னர் விதிமுறை சார்ந்த சடங்குகளும் உருவாயின.

TEACHERS adda247

129. குலக்குறி, உயிர்ப்பலி, வெறியாட்டு இவை இப்படி பகுத்தெழுதப்படும் :
(1) குலக்+குறி, உயிர்ப்+பலி, வெறி+யாட்டு
(2) குல+குறி, உயிர்பு+பலி, வெறி+ஆடு
(3) குலம்+குறி, உயிர்+பலி, வெறித்த+ஆடு
(4) குலம்+குறி, உயிர்+பலி, வெறி+ஆட்டு

130. வைதீகம், அவைதீகம் என்பவற்றில் உள்ள வேறுபாடு இதன் அடிப்படையில் அமைகிறது :
(1) வேத, வேள்வி சடங்குகள் உள்ளது மற்றும் அற்றது
(2) மந்திரம், மறு உலகம் என்பதன் தொடர்ச்சி
(3) வடமொழி, தொல் சமயம் இரண்டும் இணைந்தது
(4) சமயச் சார்புடையது, சமயச் சார்பற்றது

131. இயற்கை வழிபாட்டுக்குப் பிறகான வழிபாடுகள் இவை : _________ , _________.
(1) அணங்கு, சூர்
(2) மூதாதையர் வழிபாடு, வீரர் வழிபாடு
(3) மனித உருவேற்றம், அச்சம் தரும் தெய்வம்
(4) அச்சம் தரும் தெய்வங்கள், அன்புகாட்டும் கடவுள்கள்

132. சடங்குகளில் இருவகை : ……………சடங்கு, ……………சடங்கு
(1) நிலைத்த, விதிமுறைச்
(2) பண்பேற்ற, பால் சார்புச்
(3) எதிர்மறைச், ஆக்கமுறைச்
(4) பெண் பூசாரி, ஆண் பூசாரி

133. அச்சம் தரும் தெய்வங்களுக்கு ……………………………………, அன்புகாட்டும் தெய்வங்களுக்கு …………………………………… வழிகாட்டு முறைகளாக இருந்த குறிப்பு இங்கு காணப்படுகிறது :
(1) நடுகல்லும், உருவமும்
(2) உருவமும், நடுகல்லும்
(3) பூச்சொரிதலும், உயிர்ப் பலியும்
(4) உயிர்ப்பலியும், பூச்சொரிதலும்

134. சங்க இலக்கியச் சான்றுகள் வழி அறியக் கிடைக்கும் சமய நெறிகள், இவை பொதுவான வழக்கில் இருந்தவை :
(1) குலக்குறி வழிபாடு, உயிர்ப்பலி, வெறியாட்டம்
(2) தொல் சமயம், வைதீக சமயம், அவைதீக சமயம்
(3) சைவம், பெண் தெய்வ வழிபாடு, குலக்குறி வழிபாடு
(4) தொல் சமயம், இயற்கை வழிபாடு, நடுகல் வழிபாடு

135. காலன், காலி, காளி என்ற தெய்வங்களின் பெயர்களில் உள்ள _______ சார் பெயர், என்பதை அடிப்படையாகக் கொண்டது :
(1) பண்பு, குலக்குறி
(2) சடங்கு, உயிர்ப்பலி
(3) நிறம், கருமை
(4) வடமொழி, வழிபாடு

TEACHERS adda247

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 136-150)

136. நான்காம் வகுப்பு மாணவர்களை ஒரு குறிப்பிட்ட தலைப்பில் சுதந்திரமாக எழுத ஓர் ஆசிரியர் அனுமதிக்கலாம், ஆனால் அந்தத் தலைப்பு இத்துடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும்.
(1) சமூகச் சிக்கல்கள்
(2) தேசிய ஒருமைப்பாடு
(3) தன் வாழ்க்கை
(4) சுற்றுச்சூழல் கேடுகள்

137. மொழியை அலுவல் முறையில் இன்றி கற்கும் போது அதன் பகுதியாக அமைவது எது ?
(1) மொழிச் செயல்முறைக் கூடம்
(2) வீட்டுச் சூழல்
(3) மொழிப் பயிற்சி மையம்
(4) பள்ளி

138. முன்பே வாசிக்கப்பட்ட ஒரு கதையை எடுத்துரைக்கும்படி மாணவர்களிடம் கேட்டுக்கொள்ளும் போது, இதனை மதிப்பிட அது ஆசிரியர்களுக்கு உதவி செய்கிறது :
(1) நினைவாற்றல்
(2) புரிதல் திறன்
(3) உச்சரிப்பு முறை
(4) எழுத்தொலிப்பு முறை

139. எழுத்துத் திறனில் நேரும் குறைபாடு :
(1) டிஸ்லெக்ஸியா
(2) டிஸ்கிராபியா
(3) டிஸ்கால்குலியா
(4) டிஸ்ஃபோரியா

140. எழுதப்பட்ட பாடப்பகுதியைப் படிப்பது வெறும் உச்சரிப்பு முறையைப் பழகுவது மட்டுமல்ல, அது இதற்கும் முக்கியப் பங்களிக்கிறது :
(1) தடையின்றி பேசும் திறன் கொண்டவராக ஒருவரை ஆக்குகிறது.
(2) பாடப்பகுதியின் பொருளைப் புரிந்துகொள்ள உதவுகிறது.
(3) புதிய சொற்பொருளையும் வாக்கிய அமைப்பையும் புரிந்து கற்க உதவுகிறது.
(4) புதிய சொற்களை உச்சரிப்பதில் நேரும் தடைகளைக் கடக்க உதவுகிறது.

141. தொடக்க வகுப்பில் உள்ள குழந்தைகளுக்கு அவர்களின் தாய்மொழியில் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதற்கான காரணம் :
(1) குழந்தைகளின் வட்டார வழக்கு மொழியை மேம்படுத்துவதற்காக.
(2) இயற்கைச் சூழ்நிலையை உருவாக்குவதற்காக.
(3) குழந்தைகள் எந்த மொழியையும் புரிந்துகொள்ள முடியாது என்பதால்.
(4) குழந்தைகளின் படைப்புத் திறனை வளர்ப்பதற்காக

TEACHERS adda247

142. ஒன்றாம் வகுப்புப் பாடநூல் பாடல்கள், கதைகள் எனத் தொடங்கி பிறகு அகர வரிசை எழுத்துக்கு வருகிறது. இந்த வகைப் பாடநூல் எந்த அணுகுமுறையைப் பின்பற்றுகிறது :

(1) கீழிருந்து மேல் நோக்கிய முறை

(2) மேலிருந்து கீழ் நோக்கிய முறை

(3) ஒழுங்குபடுத்துதல் முறை

(4) பாடத்திட்ட வடிவமைப்பு முறை

143. பின் வருவனவற்றில் சரியான வாசகம் எது ?

(1) ஒன்றாம் வகுப்பு குழந்தைகளுக்கு ஆங்கிலம் தெரியாது.

(2) குழந்தைகள் பள்ளிக்கு வரும்போதே தம்முடன் ஒரு அனுபவக் களஞ்சியத்தைக் கொண்டு வருகிறார்கள்.

(3) பள்ளிக்கு வரும்போது குழந்தைகள் எழுதப்படாத வெற்றுப் பலகைகளாக உள்ளனர்.

(4) பட்டியலிடப்பட்ட சில சொற்களை மனப்பாடம் செய்ய வைப்பதன் மூலம் குழந்தைகளுக்கு மொழி கற்பிக்கப்பட வேண்டும்.

144. தனது முதல் மொழியை ஒரு குழந்தை இயல்பாக..............................

(1) கற்றுக்கொள்கிறது.

(2) போலச் செய்கிறது.

(3) தன்வயப்படுத்துகிறது.

(4) மறு சேகரம் செய்கிறது.

145. பின் வருவனவற்றுள் எந்த ஒன்று பெற்றுக் கொள்ளும் திறனுடன் தொடர்புடையது ?

(1) கவனித்தல், பேசுதல்

(2) கவனித்தல், படித்தல்

(3) வாசித்தல், எழுதுதல்

(4) படித்தல், பேசுதல்

146. ஓர் ஆசிரியர் மாணவர்களிடம் ‘பெயரடைச் சொல்’ பற்றி ஏதாவது ஒரு கூறைச் சொல்லும்படி கேட்டு , பிறகு அதன் வரையரையை விளக்குகிறார். இந்த முறை இவ்வாறு அழைக்கப்படுகிறது:

(1) இன்டக்டிவ் முறை

(2) டிடக்டிவ் முறை

(3) டோடல் ஃபிஸிகல் ரெஸ்பான்ஸ் (டி பி ஆர்)

(4) இம்மெர்ஷன் முறை

TEACHERS adda247

147. ஓர் ஆசிரியரின் துணையுடன் முறைப்படுத்தப்பட்ட சூழலமைப்பில் கற்கப்படும் மொழி எது ?
(1) முதல் மொழி
(2) இரண்டாம் மொழி
(3) தாய்மொழி
(4) இல்ல மொழி

148. ஓர் ஆசிரியர் புதிய சொற்களைக் கற்பிக்கும் போது உண்மையான பொருட்களைக் காட்டுகிறார், இதற்குக் காரணம் :
(1) உண்மையான பொருட்களைக் காட்டித்தான் நாம் புதிய சொற்களைப் பயன்படுத்த முடியும்.
(2) சொற்களின் சரியான எழுத்தொலிப்பு முறையைக் கற்பிக்க இது உதவுகிறது.
(3) நேரடியாகப் பொருளைப் பார்க்கும் போது அதனைச் சொற்களுடன் உறவுபடுத்திப் பார்க்கவும், தமது மொழியில் சொல்லவும் உதவுகிறது.
(4) குழந்தைகள் அருவமான கருத்துக்களைப் புரிந்து கொள்ள இயலாதவர்கள், அதனால் பருப்பொருள் வழி தெளிவாக ஒன்றைக் கற்க முடிகிறது.

149. மொழிப் பாடத்திட்டத்தில் இலக்கியப் பகுதி சேர்க்கப்பட வேண்டியதற்கான காரணம் :
(1) நம்பகத் தன்மை கொண்ட மொழியைக் கற்பிக்கவும் கற்கவும் அது ஒரு ஊடகம்.
(2) மாணவர்கள் விமர்சனத் தன்மையுடன் சிந்திக்க அது உதவுகிறது.
(3) பாடத்திட்டத்தின் சுமை மாணவர்களின் மீது படிவதைக் குறைக்க அது உதவுகிறது.
(4) மாணவர்கள் புதிய சொற்களைக் கற்க உதவுகிறது.

150. மொழி வகுப்பில் கதை சொல்லுதல் இந்தக் காரணத்தால் முக்கியப் பங்கு வகிக்கிறது :
(1) நீதிகளைப் போதிக்கிறது.
(2) அது மகிழ்வளிக்கும் நல்ல வழியாக உள்ளது.
(3) அது ஆசிரியர்கள் இளைப்பாற உதவுகிறது.
(4) மொழியை முழு வடிவில் அது தருகிறது.

TEACHERS adda247

SPACE FOR ROUGH WORK

TEACHERS adda247

**கீழ்வரும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்**

1. கேள்விகளுக்கு விடையளிக்கும் முன் தேர்வு நூற்கட்டில் உள்ள விளக்கங்களைக் கவனமாகப் படிக்கவும், விடையளிக்க வேண்டிய வேறுபட்ட முறைகள் அதில் விளக்கப்பட்டுள்ளன.
2. பக்கம் 2-ல் ஓஎம்ஆர் (OMR) விடைத்தாளில் உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய நான்கு விடைகளில் மிகச் சரியான ஒரு விடையை மட்டும் நீலம் பந்துருள்முனைப் பேனாவினால் முழுவதுமாக மைபட்டை தீட்டப்பட வேண்டும்.
3. தேர்வு எழுதுபவர் அவர்தம் விடைத்தாள் மடிந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். விடைத் தாளில் எவ்விதமான அடித்தல் திருத்தலும் செய்தல் கூடாது. விடைத்தாளில் உரிய இடத்தில் மட்டுமின்றிப் பிற எங்கும் தேர்வு வரிசை எண்ணைக் குறிப்பிடக் கூடாது.
4. எச் சூழ்நிலையிலும் (தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு/எண்ணும் தேர்வு விடைத்தாள் குறியீடு/எண்ணும் தம்முள் முரண்படும் நிலையில் மட்டுமன்றி) தேர்வு எழுதுபவருக்கு வேறொரு விடைத்தாள் இணை அளிக்கப்படாது. ஆகவே தேர்வு நூற்கட்டையும் விடைத்தாளையும் தேர்வு எழுதுபவர் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.
5. தேர்வு எழுதுபவர் தேர்வு வருகைத் தாளில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தேர்வு நூற்கட்டு மற்றும் விடைத்தாள் குறியீடு மற்றும் எண்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.
6. ஓ.எம்.ஆர் விடைத்தாளில் உள்ள தகவல்களை ஒரு இயந்திரம் மதிப்பிட உள்ளது. அதனால் தகவல் எதுவும் விடுபடாமல் இருப்பதும் அனுமதி அட்டையில் தரப்பட்டிருப் பதிலிருந்து மாறுபடாமல் இருப்பதும் அவசியம்
7. தேர்வு எழுத அனுமதி அட்டை தவிர மற்றபடி அச்சு/கையெழுத்துக் குறிப்புகள், துணுக்குகள், பேஜர், செல்போன், மின்சாதனம் எதனையும் தேர்வுக் கூடத்திற்குள் தேர்வு எழுதுவோர் கொண்டு செல்லக் கூடாது.
8. தேர்வு அறைக்குள் அலைபேசி கருவிகள், தொலைத்தொடர்புக் கருவிகள் (செயல் நிறுத்தப்பட்ட நிலையில் கூட) மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்கள் எதுவும் கொண்டுவரப்படக் கூடாது. இதனைக் கடைபிடிக்காத தேர்வு எழுதுவோர் முறைமீறியவராக கொள்ளப்பட்டு தேர்விலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுது உட்பட பிற நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரும்.
9. தேர்வு மேற்பார்வையாளர் வினவும் போது தேர்வு எழுதுபவர் தம் அனுமதி அட்டையைக் காண்பிக்க வேண்டும்.
10. தேர்வுக் இடக் கண்காணிப்பாளர்/தேர்வு மேற்பார்வையாளர் சிறப்பு அனுமதியின்றித் தேர்வு எழுதுபவர் தம் இருக்கையிலிருந்து வெளியேறக் கூடாது.
11. தேர்வு மையத்திற்குள் நுழைதல், தேர்வு மையத்திலிருந்து வெளியேறுதல் ஆகிய இரு வேளையிலும் தேர்வு வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாமலும், விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்காமலும் வெளியேறக் கூடாது. வெளியேறுகையில் வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாத தேர்வு எழுதுபவரின் விடைத்தாள் திருப்பி அளிக்கப்படாததாகக் கருதப்படும். இந்த முறை மீறிய செயலுக்கு உரிய எதிர்வினை மேற்கொள்ளப்படும்.
12. மின் இயங்கு/மின் இயங்காக் கணிப்பான்களுக்கு அனுமதி இல்லை.
13. தேர்வு ஆணையத்தின் அனைத்துவிதமான நடத்தை விதிமுறைகளுக்கும் தேர்வு எழுதுபவர் கட்டுப்படுவது கட்டாயம். முறை மீறிய செயல்கள் மீது தேர்வாணையத்தின் விதிமுறைகள்படி நடவடிக்கை எடுக்கப்படும்.
14. எச் சூழலிலும் தேர்வு நூற்கட்டும் விடைத்தாளும் தனித்தனியே பிரிக்கப்படக் கூடா.
15. தேர்வு எழுதி முடித்தபின் தேர்வு எழுதுபவர் தம் விடைத்தாளை மேற்பார்வையாரிடம் திருப்பி அளிக்க வேண்டும். தேர்வு எழுதுவோர் இத் தேர்வு நூற்கட்டை உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

TEACHERS adda247

**निम्नलिखित निर्देशों को ध्यान से पढ़ें :**

1. जिस प्रकार से विभिन्न प्रश्नों के उत्तर दिए जाने हैं उसका वर्णन परीक्षा पुस्तिका में किया गया है, जिसे आप प्रश्नों का उत्तर देने से पहले ध्यान से पढ़ लें ।
2. प्रत्येक प्रश्न के लिए दिए गए चार विकल्पों में से सही उत्तर के लिए OMR उत्तर पत्र के **पृष्ठ-2** पर केवल एक वृत्त को ही पूरी तरह **काले/नीले बॉल पॉइन्ट पेन** से भरें । एक बार उत्तर अंकित करने के बाद उसे बदला नहीं जा सकता है ।
3. परीक्षार्थी सुनिश्चित करें कि इस उत्तर पत्र को मोड़ा न जाए एवं उस पर कोई अन्य निशान न लगाएँ । परीक्षार्थी अपना अनुक्रमांक उत्तर-पत्र में निर्धारित स्थान के अतिरिक्त अन्यत्र न लिखें ।
4. परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र का ध्यानपूर्वक प्रयोग करें, क्योंकि किसी भी परिस्थिति में (केवल परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र के संकेत या संख्या में भिन्नता की स्थिति को छोड़कर) दूसरी परीक्षा पुस्तिका उपलब्ध नहीं करायी जाएगी ।
5. परीक्षा पुस्तिका / उत्तर पत्र में दिए गए परीक्षा पुस्तिका संकेत व संख्या को परीक्षार्थी सही तरीके से हाज़िरी-पत्र में लिखें ।
6. OMR उत्तर पत्र में कोडित जानकारी को एक मशीन पढ़ेगी । इसलिए कोई भी सूचना अधूरी न छोड़ें और यह प्रवेश-पत्र में दी गई सूचना से भिन्न नहीं होनी चाहिए ।
7. परीक्षार्थी द्वारा परीक्षा हॉल/कक्ष में प्रवेश-पत्र के सिवाय किसी प्रकार की पाठ्य-सामग्री, मुद्रित या हस्तलिखित, कागज़ की पर्चियाँ, पेजर, मोबाइल फोन, इलेक्ट्रॉनिक उपकरण या किसी अन्य प्रकार की सामग्री को ले जाने या उपयोग करने की अनुमति नहीं है ।
8. मोबाइल फोन, बेतार संचार युक्तियाँ (स्वीच ऑफ अवस्था में भी) और अन्य प्रतिबंधित वस्तुएँ परीक्षा हॉल/कक्ष में नहीं लाई जानी चाहिए । इस सूचना का पालन न होने पर इसे परीक्षा में अनुचित साधनों का प्रयोग माना जाएगा और उनके विरुद्ध कार्यवाही की जाएगी, परीक्षा रद्द करने सहित ।
9. पूछे जाने पर प्रत्येक परीक्षार्थी, निरीक्षक को अपना प्रवेश-पत्र दिखाएँ ।
10. केन्द्र अधीक्षक या निरीक्षक की विशेष अनुमति के बिना कोई परीक्षार्थी अपना स्थान न छोड़ें ।
11. कार्यरत निरीक्षक को अपना उत्तर पत्र दिए बिना एवं हाज़िरी-पत्र पर दुबारा हस्ताक्षर किए बिना परीक्षार्थी परीक्षा हॉल/कक्ष नहीं छोड़ेंगे । यदि किसी परीक्षार्थी ने दूसरी बार हाज़िरी-पत्र पर हस्ताक्षर नहीं किए, तो यह माना जाएगा कि उसने उत्तर पत्र नहीं लौटाया है और यह अनुचित साधन का मामला माना जाएगा । **परीक्षार्थी अपने बाएँ हाथ के अंगूठे का निशान हाज़िरी-पत्र में दिए गए स्थान पर अवश्य लगाएँ ।**
12. इलेक्ट्रॉनिक / हस्तचालित परिकलक का उपयोग वर्जित है ।
13. परीक्षा हॉल/कक्ष में आचरण के लिए परीक्षार्थी बोर्ड के सभी नियमों एवं विनियमों द्वारा नियमित हैं । अनुचित साधनों के सभी मामलों का फैसला बोर्ड के नियमों एवं विनियमों के अनुसार होगा ।
14. किसी हालत में परीक्षा पुस्तिका और उत्तर पत्र का कोई भाग अलग न करें ।
15. **परीक्षा सम्पन्न होने पर, परीक्षार्थी हॉल / कक्ष छोड़ने से पूर्व उत्तर पत्र कक्ष-निरीक्षक को अवश्य सौंप दें । परीक्षार्थी अपने साथ इस परीक्षा पुस्तिका को ले जा सकते हैं ।**

**READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY:**

1. The manner in which the different questions are to be answered has been explained in the Test Booklet which you should read carefully before actually answering the questions.
2. Out of the four alternatives for each question, only one circle for the correct answer is to be darkened completely with **Black/Blue Ball Point Pen** on **Side-2** of the OMR Answer Sheet. The answer once marked is not liable to be changed.
3. The candidates should ensure that the Answer Sheet is not folded. Do not make any stray marks on the Answer Sheet. Do not write your Roll No. anywhere else except in the specified space in the Answer Sheet.
4. Handle the Test Booklet and Answer Sheet with care, as under no circumstances (except for discrepancy in Test Booklet Code or Number and Answer Sheet Code or Number), another set will be provided.
5. The candidates will write the correct Test Booklet Code and Number as given in the Test Booklet / Answer Sheet in the Attendance Sheet.
6. A machine will read the coded information in the OMR Answer Sheet. Hence, no information should be left incomplete and it should not be different from the information given in the Admit Card.
7. Candidates are not allowed to carry any textual material, printed or written, bits of papers, pager, mobile phone, electronic device or any other material except the Admit Card inside the examination hall/ room.
8. Mobile phones, wireless communication devices (even in switched off mode) and the other banned items should not be brought in the examination halls/ rooms. Failing to comply with this instruction, it will be considered as using unfair means in the examination and action will be taken against them including cancellation of examination.
9. Each candidate must show on demand his / her Admit Card to the Invigilator.
10. No candidate, without special permission of the Centre Superintendent or Invigilator, should leave his / her seat.
11. The candidates should not leave the Examination Hall/ Room without handing over their Answer Sheet to the Invigilator on duty and sign the Attendance Sheet twice. Cases where a candidate has not signed the Attendance Sheet second time will be deemed not to have handed over the Answer Sheet and dealt with as an unfair means case. **The candidates are also required to put their left hand THUMB impression in the space provided in the Attendance Sheet.**
12. Use of Electronic / Manual Calculator is prohibited.
13. The candidates are governed by all Rules and Regulations of the Board with regard to their conduct in the Examination Hall/Room. All cases of unfair means will be dealt with as per Rules and Regulations of the Board.
14. No part of the Test Booklet and Answer Sheet shall be detached under any circumstances.
15. **On completion of the test, the candidate must hand over the Answer Sheet to the Invigilator in the Hall / Room.** ***The candidates are allowed to take away this Test Booklet with them.***

TEACHERS adda